// அவசரம் //　　　　　　　　　　　　　　　　　　　　　　// தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4192/அ1/2023 நாள் 06.10.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி - அமைச்சுப் பணி – 15.03.2011 ஆம் ஆண்டு முதல் 15.03.2022 ஆம் ஆண்டு வரை இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் ( நிலை 3 ) பதிவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெற்ற உதவியாளர்கள், நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர் பணிபுரியும் பணியாளர்களின் விவரங்கள் கோருதல் - தொடர்பாக |
| பார்வை | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் ( பணியாளர் தொகுதி ) செயல்முறைகள் ந.க.எண் 62888/அ4/இ3/2023 நாள் 05.10.2023 |

பார்வையில் காணும் செயல்முறைகளில், பள்ளிக் கல்வி துறையில் பணிபுரியும் உதவியாளர்கள் ( நேரடி நியமனம் / பதவி உயர்வு ) , இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களாக ( நேரடி நியமனம் / கருணை அடிப்படை / பதவி உயர்வு ) பணிபுரியும் பணியாளர்களின் விவரம் கீழ்க்கண்டவாறு கோரப்படுகிறது.

1. 15.03.2011 ஆம் ஆண்டு முதல் 15.03.2022 ஆம் ஆண்டு வரை இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் ( நிலை 3) பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு பெற்று பணிபுரியும் உதவியாளர்களின் விவரங்கள் படிவம் -1 ல் அனுப்பப்பட வேண்டும்.
2. நேரடி நியமன உதவியாளராக பணிபுரியும் பணியாளர்களின் விவரம் படிவம் 2 –ல் அனுப்பப்பட வேண்டும்.
3. தற்போது இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சராக ( நேரடி நியமனம் / கருணை அடிப்படை / பதவி உயர்வு ) பணிபுரியும் பணியாளர்களின் விவரம் படிவம் 3 ல் அனுப்பப்பட வேண்டும்.

மேற்காணும் படிவங்களை, சம்பந்தப்பட்ட பணியாளர்கள் முதன் முதலில் நியமன செய்யப்பட்ட நாள் முதல் உள்ள ஆவணங்களுடன் சரிபார்த்து அதன் விவரத்துடன் எந்தவொரு கலமும் விடுபடாமல் முழுமையாக பூர்த்தி செய்து கீழ்க்காணும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் இவ்வலுவலக அ1 பிரிவில் தலைமைஆசிரியர்களின் கையொப்பமிட்ட 3 பிரதியுடன் மற்றும் குறுந்தகட்டில் ( Excelல் மருதம் Font ல் ) தட்டச்சு செய்த விவரத்தினை பதிவு மேற்கொண்டு நேரடியாக தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | விவரங்கள் சமர்பிக்கப்பட வேண்டிய நாள் | ஒன்றியம் |
|---|---|---|
| 1 | 09.10.2023 | பேர்ணாம்பட்டு |
| 2 | 10.10.2023 | குடியாத்தம் |
| 3 | 11.10.2023 | காட்பாடி & கே.விகுப்பம் |
| 4 | 12.10.2023 | அணைக்கட்டு |
| 5 | 13.10.2023 | கணியம்பாடி |
| 6 | 16.10.2023 | வேலூர் |

மேலும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் உரிய படிவங்களில் கோரப்பட்டுள்ள விவரத்தின் படி அனைத்து ஆணைகளுடன் இத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும் என திட்டவட்டமாக மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

படிவம் 1,2 மற்றும் 3

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   இடைநிலை / தொடக்ககல்வி / தனியார் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்

2. தலைமைஆசிரியர்கள்
   அரசு / நகரவை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.